தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

| | | |
|---|---|---|
| **S.நாகராஜன்** | **K.சந்திரசேகரன்,B.A** | **B.தியாகராஜன், M.Com.,** |
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |


கடித எண்:108/19
10-06-2019

பெறுநர்,
தலைமைப் பொறியாளர் /பணிஅமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - மின்கட்டணக்கணக்கீடு மற்றும் வசூல் பணித்தொகுப்பு - மதிப்பீட்டாளர் பொறுப்பிலிருந்து மதிப்பீட்டாய்வாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு உத்திரவுகள் வழங்கப்பட்டது தொடர்பாக.

பார்வை : Letter No:011978/29/G25/G251/2018-11, dt: 31-12-2018.

*********

எங்களது சங்கம் உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்களின் சார்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று மின்கட்டணக் கணக்கீடு மற்றும் வசூல் பணித்தொகுப்பில் பணிபுரிந்துவந்த 1604 மதிப்பீட்டாளர்களுக்கு மதிப்பீட்டாய்வாளர் பொறுப்பிற்கு பார்வையில் குறிப்பிட்டுள்ள தங்களது கடிதம் வாயிலாக பதவி உயர்வும் வட்ட ஒதுக்கீடும் வழங்கியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால் வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட பதவி உயர்வு ஆணையின் பத்தி 6ல் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது சட்டத்திற்கும், இயற்கை நியாயத்திற்கும் புறம்பானது என்பதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வரவிழைகின்றோம்.

“6, I am to inform that in promotion orders of Assessors to Inspector of Assessment, it should be informed that the promotive Inspector of Assessment should attend the works of Assessor till the post of Assessor are filled up as instructed in this office vide (Per) B.P.(FB) No.68, (Sect.Branch), dt :25-11-2002”.

மேற்கண்ட பத்தியில் தாங்கள் குறிப்பிட்டுள்ள வாரிய ஆணை (Per)B.P(F.B)No:68(Sect.Branch) dt:25-11-2002ம் அந்த ஆணை வழங்கப்பட்டதற்கு ஆதாரமான 25-01-2000/12-11-2002 ஆகிய நாட்களில் மின்வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே 1947ம் ஆண்டைய தொழிற்தகராறுகள் சட்டத்தின் அடிப்படையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் காலாவதியாகி விட்டது.

அதன்பின் 15-10-2005, 18-11-2009, 09-01-2014 ஆகிய நாட்களில் தொழிற்தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)ன்கீழ் மின்வாரிய நிர்வாகத்திற்கும், தொழிற்சங்கங்களுக்குமிடையே வேலைப்பளு குறித்து முத்தரப்பு ஒப்பந்தங்கள் ஏற்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டது.

இறுதியாக மின்வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே தொழில்தகராறுகள் சட்டம் பிரிவு 12(3)ன்கீழ் 01-12-2015லிருந்து மின்வாரிய ஊழியர்களுக்கு அமுல்படுத்தப்பட்ட புதிய ஊதிய விகிதங்கள் மற்றும் வேலைபளு திருத்தம் குறித்து 22-02-2018 அன்று கையெழுத்தான முத்தரப்பு ஒப்பந்தம்தான் நடைமுறையில் உள்ள ஒன்றாகும்.

மேற்குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் வேலைபளு திருத்தம் குறித்த பகுதி Iல் மின்கட்டணக் கணக்கீடு மற்றும் வசூல் பணித்தொகுப்பு ஊழியர்களான மதிப்பீட்டாய்வாளர்களுடைய கடமைகள் கீழ்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

## **Duties of Inspector of Assessment**

Each section shall have one or more Inspector of Assessments. In sections, where the total number of services exceeds 10,000, two Inspectors of Assessment will be sanctioned.

DUTIES:

1. Field verification of the correctness of the Assessment and appropriate tariff of the following services.
   a) 30% Industrial and Commercial Services.
   b) 15% of the other services.
2. 50% of field verification of the final reading of the services remaining disconnected over three months by rotation.
3. Report on replacement of meters to be downloaded from, the computer and the average billing correctness to be verified and revised in any accordingly.
4. Collection of the current consumption charges and miscellaneous collections in the absence of Assessor (Collection) along with the Assessor as per the need.
5. Overseeing the work of Assessors in connection with Assessment, Collection and remittance.
6. Maintaining records for the receipt of computer receipt, PCB.
7. Arranging to send back the completed PCB to the Revenue Branch.
8. Attending the remittance work on need basis and ensure the correctness of the cheques to be verified.
9. Attending consumer’s enquiries/correspondences relating to Assessment, and collection and receiving cash collection for safe custody from Assessors in the absence of Revenue Supervisor duly verifying the mode of collection with reference to collection statement (Computer Generated).
10. Any other works entrusted by the Revenue Supervisor/Section Officer relating to Assessment, Collection and Remittance.

மதிப்பீட்டாய்வாளர்களுக்கு ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட 10 வகையான கடமைகளில் மதிப்பீட்டாளர்கள் ஆற்றவேண்டிய மின்கட்டணக் கணக்கீட்டு பணி ஒரு கடமையாக வரையறுக்கப்படவில்லை.

ஆனால் பார்வையில் குறிப்பிட்டுள்ள தங்களது பதவி உயர்வு ஆணையின் பத்தி 6ன் அடிப்படையில் மதிப்பீட்டாளர் பொறுப்பிலிருந்து மதிப்பீட்டாய்வாளர்கள் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு மின்கட்டணக்கணக்கீட்டு பணி ஒதுக்கப்பட்டு அவர்களும் அந்த பணியினை கடந்த 5 மாதங்களாக ஆற்றி வருகின்றனர்.

எனவே மதிப்பீட்டாய்வாளர்களாக பதவி உயர்வு பெற்று பணியேற்றவர்களை மின்கட்டணக் கணக்கீட்டு பணியினை ஆற்றிட நிர்பந்திக்கும் சட்ட விரோதமான நடவடிக்கையினை உடனடியாக கைவிட்டு அவர்களுக்கு ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்ட பணிகளை மட்டும் ஒதுக்கீடு செய்திட வாரிய உத்திரவுகளை வழங்கிட வேண்டுகின்றோம்.

எங்களது மேற்கண்ட நியாயமான சட்டபூர்வமான வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டு 31-07-2019ம் நாளுக்குள் உரிய நடவடிக்கைகளை எடுத்திட நிர்வாகம் முன்வரவில்லையெனில், 09-06-2019 அன்று சென்னையில் நடைபெற்ற எங்களது சங்கத்தின் உயர்மட்டக்குழுவில் முடிவெடுத்துள்ளபடி எதிர்வரும் 01-08-2019 முதல் எங்களது சங்கஉறுப்பினர்கள் 22-02-2018ம் நாளைய வேலைபளு ஒப்பந்தத்தில் வரையறுத்துள்ளபடி, மதிப்பீட்டாய்வாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட பணிகளை மட்டுமே மேற்கொள்வார்கள் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் :

1. மேற்பார்வைப் பொறியாளர்கள்/மின்விநியோகவட்டங்கள்.
2. தலைமைப் பொறியாளர்கள் /விநியோக மண்டலங்கள்.
3. தலைமை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர் /வரவினம்.
4. இயக்குநர் நிதி /தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
5. தொழில்உறவு அலுவலர்/தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்.
6. வட்டச் செயலாளர்கள். 7. மண்டலச் செயலாளர்கள்.
8. மத்தியச்சங்கப் பொறுப்பாளர்கள். 9. செய்தி மடல்.